இனிமையான குழந்தைகளே! தந்தையுடையவர்களாக ஆகிவிட்டீர்கள் எனும்போது முதல் நம்பரில் வருவதற்கு முயற்சி செய்யுங்கள், மம்மா-பாபாவை பின்பற்றுவதன் மூலமும், படிப்பின் மீது கவனம் கொடுப்பதன் மூலமும் முதல் நம்பரில் வந்து விடுவீர்கள்.

கேள்வி: மனதின் வழிப்படி செய்திருக்கக் கூடிய கர்மங்களின் விளைவுக்கும், ஸ்ரீமத்படி செய்திருக்கக் கூடிய கர்மங்களின் விளைவுக்கும் உள்ள வித்தியாசம் என்ன?

பதில்: யார் தன் மனதின் வழிப்படி நடக்கின்றனரோ அவர்கள் இன்னும் போகப் போக கர்மங்களின் தீய விளைவுகளின் மூலம் துக்கம் மிக்கவர்களாக ஆகியபடி இருப்பார்கள். மனதின் வழி அதாவது மாயையின் வழியின் மூலம் சிலர் திவாலா ஆகி விடுகின்றனர், சிலர் நோய்வாய்ப்படுகின்றனர், சிலர் திடீர் மரணம் அடைகின்றனர்.... இவையனைத்தும் கர்மங்களின் தீய விளைவுகள் ஆகும். ஸ்ரீமத்படி குழந்தைகளாகிய நீங்கள் அரைக் கல்ப காலம் எந்த கர்மமும் உங்களை பாதிக்காத (எதிர்வினைகள் ஏற்படாத) அளவு உயர்ந்த கர்மங்களை செய்கிறீர்கள்,

பாடல்: உன்னை அடைந்ததால் நான் உலகையே அடைந்தேன். . .

ஓம் சாந்தி. குழந்தைகள் பாடலின் இரண்டு வரிகள் கேட்டீர்கள். நாம் எல்லைக்கப் பாற்பட்ட தந்தையை அடைந்தோம் எனும்போது எல்லைக்கப்பாற்பட்ட உலகின் இராஜ்யத்தை நாம் அடைந்துக் கொண்டிருக்கிறோம். பாரதத்தில் தேவி-தேவதைகளின் இராஜ்யம் இருந்த போது வேறு எந்த தர்மமும் இருக்கவில்லை என்பதை முற்றிலும் சாதாரண புத்தியாலும் கூட புரிந்து கொள்ள முடியும். இலட்சுமி - நாராயணரின் குலம்தான் இருந்தது. முதலாம் எட்வர்டு, இரண்டாம் எட்வர்டு... இவர்களின் இராஜ்யம் நடப்பது போலாகும். பாரதத்தில் இலட்சுமி - நாராயணரின் இராஜ்யம் இருந்த போது முழு உலகிலுமே அவர்களின் இராஜ்யம் இருந்தது. இதனை மனிதர்கள் மறந்து விட்டனர். இந்த பாரதத்தில் தேவி-தேவதைகளின் இராஜ்யம் இருந்த போது சத்யுகம் இருந்தது, அப்போது நீங்கள் முழு உலகின் எஜமானாக இருந்தீர்கள். பிரிவினைகள் முதலான எதுவும் இருக்கவில்லை. இலட்சுமி-நாராயணர் இரட்டை கிரீடதாரிகளாக இருந்தனர். பெரிய பெரிய இராஜாக்களும் கூட பூஜை செய்வதற்காக தங்கள் மாளிகைகளில் இலட்சுமி-நாராயணர், இராமன் - சீதை யின் கோவில்களைக் கட்டுகின்றனர். அவர்களும் பாரதத்தின் இராஜாக்களாக இருந்தனர் மற்றும் இவர்களும் பாரதத்தின் இராஜாக்களாக இருந்தனர். ஆனால் அவர்கள் சத்யுகம், திரேதா யுகத்தினராக இருந்தனர், இவர்கள் துவாபர, கலியுகத்தினராக இருந்தனர். சத்யுகம், திரேதாயுகத்தில் இலட்சுமி-நாராயணர், இராமன்-சீதையின் இராஜ்யம் இருந்தது, பிறகு விகாரி (விகாரம் நிறைந்த) இராஜாக்கள் இருப்பார்கள். விகாரி இராஜாக்களும் கூட எப்படி உருவா கின்றனர்? இந்த விசயங்களை சிவபாபா இவர் மூலமாக அமர்ந்து புரிய வைக்கிறார். பூஜைக்குரியவர்கள், பூஜாரிகள் என பாடவும் படுகிறது. சதோபிரதானத்திலிருந்து தமோபிர தானமாக கண்டிப்பாக ஆக வேண்டியுள்ளது. தந்தை சொல்கிறார் - ஓ குழந்தைகளே, நீங்கள் முன்னர் சத்யுகத்தில் சதோ குணமான மகாராஜா, மகாராணியாக இருந்தீர்கள், மேலும்

முழுமையான தூய்மையானவர்களாக இருந்தீர்கள். இது குழந்தைகளாகிய உங்களுக்கு நினைவில் இருக்கிறது. நாமே பூஜைக்குரியவர்களாக இருந்தோம், இப்போது இல்லை, மீண்டும் முயற்சி செய்வதன் மூலம் நாம் அந்த பதவியை அடைந்து கொண்டி ருக்கிறோம். மாயை பூஜாரி களாக ஆக்கி விட்டது. பாபாவிடமிருந்து கிடைக்கும் இந்த அறிவுரையை தாரணை செய்ய வேண்டும். கல்லூரியிலும் கூட மாணவர்களுக்கு கிடைக்கும் படிப்பு அவர்களின் புத்தியில் இருக்கும் அல்லவா. பாரதவாசிகளாகிய நாம் தேவதைகளாக இருந்தோம், கல்பத்திற்கு முன்பும் கூட தந்தை வந்து இராஜயோகம் கற்பித்திருந்தார் என்பது குழந்தைகளின் புத்தியில் இருக்கிறது. முக்கியமானதே கீதையின் விசயமாகும். யாராவது சந்தித்தால் அவர்களிடம் கேளுங்கள் - எப்போதாவது கீதையை கேட்டிருக் கிறீர்களா அல்லது படித்திருக்கிறீர்களா? அதில் பகவானுடைய மகா வாக்கியம் என எழுதப் பட்டுள்ளது. ஆக அதனை எப்படி சொல்வார்? பகவான் கற்பிக்கிறார் என எப்போதாவது கேள்விப் பட்டிருக்கிறீர்களா? ஒரு கீதையில் மட்டுமே பகவானுடைய மகா வாக்கியம் என உள்ளது. பகவான் இராஜயோகம் கற்பித்தார் மற்றும் நான் உங்களை இராஜாக் களுக்கெல்லாம் இராஜாவாக ஆக்குகிறேன் என சொல்லியிருந்தார் என குழந்தைகளாகிய நீங்கள் அறிவீர்கள். அவர்கள் பிறகு கிருஷ்ணரின் பெயரை எழுதி விட்டனர். கிருஷ்ணர் சத்யுகத்தின் இளவரசனாக இருந்தார். கிருஷ்ணர் இந்தப் பதவியை தம் தந்தையிடமிருந்து அடைந்தார். கிருஷ்ணர் தனியாக எதுவும் இருக்கவில்லை. இலட்சுமி நாராயணரின் இராஜ்யம் இருந்தது, அது இப்போது மீண்டும் ஸ்தாபனை ஆகிக் கொண்டிருக்கிறது. கிருஷ்ணர் 84 பிறவிகள் எடுத்து முடித்து மீண்டும் அந்த இராஜ்யத்தை அடைந்து கொண்டிருக்கிறார். ஆக குழந்தைகளாகிய உங்கள் புத்தி யில் இது வர வேண்டும். ஐந்தாயிரம் வருடங்களுக்கு முன்பும் கூட பகவான் இப்படி படிக்க வைத்தார். பகவான் ஞானம் நிறைந்தவர், ஆனந்தம் நிறைந்தவர் ஆவார். கிருஷ்ணருக்கு ஞானம் நிறைந்தவர், ஆனந்தம் நிறைந்தவர் என்பது போன்ற பட்டப் பெயர்கள் கிடையாது. தந்தை முழு சிருஷ்டியின் மீது தத்துவங்களோடு சேர்த்து அனைவரின் மீதும் ஆசீர்வாதம் செய்கிறார். அதனை பரமபிதா பரமாத்மாவைத் தவிர வேறு யாரும் செய்ய மாட்டார்கள். ஆசீர்வாதம் என்றால் நன்மை செய்தல். இங்கே பாருங்கள், தத்துவங்கள் முதலானவை அனைத்துமே தமோபிரதானமாக இருக்கின்றன. மழை பொழிந்தது என்றால் நஷ்டத்தை ஏற்படுத்தி விடுகிறது. புயல்கள் வீசியபடி இருக்கின்றன. இவையனைத்தும் சட்டத்திற்கு புறம்பானது அல்லவா. சத்யுகத்தில் நஷ்டம் ஏற்படக்கூடிய எந்த சட்டத்திற்கு விரோதமான விசயமும் நடக்காது. விவசாயம் சரியான நேரத் திற்கு தயாராகும். அந்தந்த சமயத்தில் (மழை) நீர் கிடைக்கும். அங்கே எந்த கலகம் முதலானவை ஏற்படாது. இந்த மாயையின் தொல்லைகள் துக்கம் மிக்கவர்களாக ஆக்கி விடுகிறது. மாயை என்பதன் அர்த்தத்தைக் கூட மனிதர்கள் தெரிந்து கொள்ளவில்லை. தந்தை பரமபிதா பரமாத்மா அதாவது பரம ஆத்மா என்றுதான் சொல்லப்படுகிறார் என இப்போது புரிந்து கொள்கிறீர்கள். சொல்வதும் கூட இப்படி மிகச்சரியாக சொல்ல வேண்டும்.

நான் உங்களுக்கு எந்த தீய விளைவுகளும் ஏற்படுத்தாத கர்மங்களை செய்வதற்கு கற்பிக்கிறேன். மனதின் வழிப்படி நடப்பதால் மனிதர்களின் அனைத்து கர்மங்களும் பாதிப்பை ஏற்படுத்துகின்றன அல்லவா. காய்ச்சல், இருமல் போன்றவை வந்தால் அதுவும் கூட கர்ம போகம் (கர்மத்தின்

விளைவுகள்) ஆகும். திவாலா ஆகிவிடுவதும் கூட கர்மங்களின் பாதிப்பு அல்லவா. உங்களுக்கு தந்தை உயர்வான கர்மங்கள் செய்ய கற்றுத் தருகிறார். யார் எவ்வளவு கற்றுக் கொள்கின்றனரோ அந்த அளவு சொர்க்கத்தில் உயர்ந்த பதவியை அடைவீர்கள். (ஸ்தூல) நாடகத்தில் சிலர் சிறப்பு வகுப்பில் இடத்தை முன் பதிவு செய்து கொள்கின்றனர், பிறகு வரிசைக்கிரமமாக இரண்டாம் வகுப்பு, மூன்றாம் வகுப்பு என இருக்கும், நல்ல நல்ல மனிதர்கள் முன்புற இருக்கைகளை எடுத்துக் கொள்கின்றனர். அதுபோல படிப்பிலும் கூட வரிசைக்கிரமமாக இருக்கின்றனர். நான் உங்களை எஜமானாக ஆக்குவதற்காக வந்திருக்கிறேன். யார் எவ்வளவு படிப்பார்களோ. . படிப்பு மிகவும் சகஜமேயாகும். படிக்க வைப்பவர் நிராகாரமானவர். அவருடைய பெயர் வியாசரோ அல்லது கிருஷ்ணரோ அல்ல. அவர்கள் அனைவருக்கும் சரீரம் இருக்கிறது. பிரம்மாவுக்கும் சரீரம் இருக்கிறது, கிருஷ்ணருக்கும் சரீரம் இருக்கிறது. ஸ்தூலமான அல்லது சூட்சுமமான சரீரம் இருக்கிறது என்றால் அவரை பகவான் என சொல்ல முடியாது. பகவான் ஒருவரே ஆவார், அவரை சிவன் என சொல்கின்றனர். கோவில்கள் நிறைய இருக்கலாம், ஆனால் உண்மையான பெயர் ஒன்றேயாகும், அது ஒரு போதும் மாற முடியாது. அவர் நிராகாரமான பரமபிதா பரமாத்மா ஆவார். இதனை யார் சொன்னது? பரமபிதா பரம ஆத்மா பரமதாமத்தில் இருக்கிறார் என நிராகாரமான ஆத்மா சொல்கிறது. ஆத்மாக்களாகிய நாம் அவருடைய குழந்தைகள் ஆவோம். நாமும் நடிப்பை நடிப்பதற்காக அங்கிருந்து வந்தோம். இப்போது ஒவ்வொரு நடிகரின் வாழ்க்கை வரலாற்றை சொல்வது கிடையாது. முக்கியமானவர் களுடையதை மட்டும் சொல்லப்படுகிறது. இங்கும் கூட பெரிய பெரிய மனிதர்களின் வாழ்க்கை வரலாற்றை சொல்கின்றனர் அல்லவா. இப்போது முழு எல்லைக்கப்பாற்பட்ட சிருஷ்டியில் உயர்ந்த வரிலும் உயர்ந்த மனிதர் யார்? நாடகத்தில் உயர்ந்ததிலும் உயர்ந்த நடிப்பு யாருடையது? இதனையும் கூட புரிந்து கொள்ள வேண்டும். நடிகர்களாகிய நமக்கு தந்தை அமர்ந்து புரிய வைக்கிறார். தந்தைதான் தயாரிப்பாளரும் (படைப் பவரும்), இயக்குனரும் ஆவார். சிவபாபா பிரம்மாவுக்கு வழி கொடுக்கிறார் - நீ தேவி தேவதா தர்மத்தை ஸ்தாபனை செய்ய வேண்டும். ஸ்தாபனை செய்து பின் அங்கே சென்று பாலனையும் (பராமரிப்பும்) செய்ய வேண்டும். நான் செய்யப் போவதில்லை. உங்களுக்கு கற்பிக்கிறார், வழி கொடுக்கிறார் அல்லவா. செய்பவர் மற்றும் செய்விப்பவர் அல்லவா. தானும் செய்கிறார். ஞானத்தை சொல்கிறார், பிறகு செய்யவும் வைக்கிறார் அல்லவா. இதனை செய் என ஸ்ரீமத் (உயர்ந்த வழி) கிடைக்கிறது. நாடகத்தின்படி பிரம்மா இந்த ஸ்தாபனையை செய்து பிறகு இராஜ்யம் செய்வார். பிராமணர், பிராமணிகளும் கூட இராஜ்யம் செய்வார்கள்.

தந்தை புரிய வைக்கிறார் - நான் மட்டுமே நிராகாரமாக இருக்கிறேன், மற்ற அனைவருமே சாகாரமானவர்கள் (ஸ்தூல உடலை உடையவர்கள்). இப்போது அந்த நிராகாரமான பரமபிதா பரமாத்மா ஆத்மாக்களுக்கு வழி கொடுக்கிறார். ஆத்மா இந்த காது களால் கேட்கிறது, வாயினால் பேசுகிறது. ஆக அனைவரையும் விட முக்கியமானவர் பரமபிதா பரமாத்மா, பிறகு சூட்சும வதனவாசிகளாகிய பிரம்மா, விஷ்ணு, சங்கரர், பிறகு சங்கமயுகத்தில் இருக்கும் ஜகதம்பா சரஸ்வதி மற்றும் பிரஜாபிதா பிரம்மா ஆவார்கள். இவர் உயர்ந்ததிலும் உயர்ந்தவர் அல்லவா. இவர் மூலமாக படைப்பு ஏற்படுகிறது. நீங்கள் அனைவரும் சேர்ந்து பாரதத்தை சொர்க்கமாக்கு கிறீர்கள், தந்தையின்

உதவியின் மூலம் நீங்கள் மனிதர்களை தேவதைகளாக ஆக்குகிறீர்கள். சத்யுகத்தில் தெய்வீக சம்பிரதாயத்தினர் இருப்பார்கள். நீங்கள் ஒருபோதும் துக்கம் மிக்கவர்களாக ஆகி விடாதபடியான கர்மத்தை நான் உங்களுக்கு கற்பிக்கிறேன் என தந்தை சொல்கிறார். இப்போது அனைத்துக்கும் ஆதாரம் உங்களுடைய முயற்சியில் உள்ளது. தந்தையுடையவர்களாகி முதல் வகுப்பு நுழைவுச் சீட்டு வேண்டுமானாலும் எடுங்கள், சூரியவம்சத்தவராக ஆகுங்கள், சந்திர வம்சத்தவராக வேண்டுமானாலும் ஆகுங்கள். உங்களுடைய மம்மா பாபா அனைவரை விடவும் அதிக முயற்சி செய்கின்றனர். சேவை செய்கின்றனர். அவர்கள் மகாராணி, மகாராஜாவாக ஆகப் போகின்றனர். நீங்கள் அவர்களுடைய சிம்மாசனத்தை கைப்பற்று வீர்கள் அல்லவா? அல்லது தோல்வியடைந்து விடுவீர்களா? ஜகதம்பாவுக்கு எவ்வளவு பெயர் இருக்கிறது! சரஸ்வதி பிரம்மா வின் மகள் ஆவார். ஆக, இருவருக்கும் தனித் தனிக் கோவிலாக ஆக்கிவிட்டனர். பிரம்மாவுக்கும் கூட அஜ்மீரில் பெரிய கோவில் உள்ளது. அவர் ஜகத் பிதா, இவர் ஜகத் மாதா. ஜகத்தை (உலகத்தை) படைப்பவர்கள்.

முக்கியமான தர்மங்கள் நான்கு, பிறகு நிறைய சிறு சிறு மடங்கள் முதலானவைகள் வெளிப்பட்டபடி இருக்கின்றன. தங்களுக்குள் சண்டையிட்டபடி இருக்கின்றனர், ஏனென்றால் பிரிவினைகள் நிறைய இருக்கின்றன. அங்கும் இங்குமாக சண்டைகள் நடந்துக்கொண்டிருக் கின்றன. சத்யுகத்தில் இப்படி இருக்காது. ஆக தந்தை புரிய வைக்கிறார் - இனிமையான, செல்ல மான குழந்தைகளே, இந்த நாடகத்தைப் புரிந்து கொள்ள வேண்டும். ஆத்மாக்களாகிய நாம் பரந்தாமத்திலிருந்து வருகிறோம், கர்ப்பத்தில் சரீரத்தை தாரணை செய்து நடிப்பை நடிக்கிறோம் என்பதை அறிவோம். இப்போது நடிப்பு முடிந்து விட்டது, பிறகு சரீரத்தை விட்டு விட்டு அசரீரியாகி செல்ல வேண்டும். தந்தை வந்து விட்டார். சிவ ஜெயந்தியும் உள்ளது. கண்டிப்பாக சிவபாபா வந்து அவதரித்திருக்கிறார். அவருடைய ஜெயந்தி எப்போது, எப்படி நடந்தது, சிவபாபா எப்படி யாருக்குள் வந்தார், வந்து என்ன செய்தார் - இது யாருக்கும் தெரியாது. கண்டிப்பாக பாரதத்தை சொர்க்கமாக ஆக்கியிருப்பார். தந்தை வரவில்லையென்றால் யார் கற்றுத் தருவார்கள்? மற்ற அனைவரின் வழியும் கலியுகத்தின் அசுர வழியாகும். அவைகளின் மூலம் உயர்ந்தவர்களாக ஆக முடியாது. இப்போது நான் உங்களுக்கு நல்ல வழியைக் கொடுக்கிறேன். வேறு யார் வழியிலும் செல்லாதீர்கள். உயர்ந்தவர்களிலும் உயர்ந்த நான், கண்டிப்பாக உயர்ந்தவர் களாக ஆக்குவேன். ஆக அந்த உயர்ந்த வழியை பிடித்துக் கொள்ள வேண்டும், வேறு யாருடைய வழியையாவது பின்பற்றினீர்கள் என்றால் ஏமாற்றமே அடைவீர்கள். ஒவ்வொரு காலடியிலும் ஸ்ரீமத் (உயர்ந்த வழியை) எடுத்துக் கொண்டால் இந்த இலட்சுமி-நாராயணர் போல ஆவீர்கள். அவருடைய மகிமையே - நீயே தாயும், தந்தையும். . . என்பதாகும். நான் தந்தை, ஆசிரியர், சத்குருவின் ரூபத்தில் உங்களுக்கு வழி கொடுக்கிறேன், அதன் மூலம் நீங்கள் இப்படி இலட்சுமி-நாராயணர் போல ஆகிறீர்கள். இந்த ஞானம் உங்களுக்கு இருக்கிறது, எனவே நீங்கள் பிறருக்குப் புரிய வைக்க முடியும்.வரிசைக்கிரமமாக இருக்கவே செய்கின்றனர். மம்மா மிகவும் புத்துணர்வை ஏற்படுத் தினார் என நீங்கள் அறிவீர்கள். பாபாவும் புத்துணர்வூட்டுகிறார். ஆக குழந்தை களாகிய நீங்களும் கூட அதனை பின்பற்ற வேண்டும். பாபா நாங்கள் தங்களிடமிருந்து கேட்டு பிறருக்கும் சொல்வோம். மிகவும் சகஜமானதேயாகும். பகவானின் மகா வாக்கியம் என எழுதப்பட்டுள்ளது

என சொல்லுங்கள். பகவான் நிராகாரமானவர். நாடகத்தில் இந்த வேத, சாஸ்திரங்கள் முதலானவை முதலிலிருந்தே உருவாகி விட்டுள்ளது என்பதை நீங்கள் அறிவீர்கள். சாஸ்திரங்களில் உள்ள அனைத்தும் எப்படி உருவாகியிருக்கிறதோ அப்படியே மீண்டும் அவை உருவாகும். எவ்வளவு ஆழமான விசயங்களாக உள்ளன. மிகவும் ஆழமான விசயங்களை சொல்லிக் கொண்டே இருப்பார். அதனை குழந்தைகள் புரிந்து கொண்டு பிறகு புரிய வைக்கவும் முடியும். வியாசரோ எழுதக் கூடிய மனிதராக இருப்பார் அல்லவா. பகவான் என யார் சொல்லப்படுகிறார்? அவர் அனைவரின் தந்தை ஆவார், கிருஷ்ணர் அல்ல. கிருஷ்ணரின் வரலாறு - புவியியலும் கூட குழந்தைகளாகிய உங்களுக்குத் தெரியும். பகவான் சிருஷ்டியை படைப்பவராக இருக்கிறார். இராஜயோகத்தை பகவான் கற்பித்தார், கிருஷ்ணர் அல்ல. நாம் இந்த இராஜயோகத்தைக் கற்று எதிர்காலத்தில் இளவரசன் - இளவரசியாக ஆகப் போகிறோம் என்ற இந்த போதை உங்களுக்கு இருக்க வேண்டும். வக்கீலுக்குப் படித்தால் போதை இருக்கும். பரீட்சையில் தேர்ச்சியடைந்து சென்று நாற்காலியில் அமர்ந்து வக்கீலாக ஆகப் போகிறோம். அனைவரும் இறந்து போகத்தான் வேண்டியுள்ளது. இறப்பதற்கு முன்பாக முயற்சி செய்யுங்கள் என இப்போது தந்தை சொல்கிறார். இந்த சமயத்தில் உங்களின் அன்பு என் மீது உள்ளது. கௌரவர்களுக்கு விபரீத (அன்பற்ற) புத்தி இருந்தது மற்றும் பாண்டவர்களுக்கு அன்பான புத்தி இருந்தது. ஆகவே தான் அன்பான புத்தி யுள்ளவர்களின் ஸ்தாபனை மற்றும் அன்பில்லாத (மாறான) புத்தியுள்ளவர்களின் வினாசம் ஆகியது. இது படிப்பாகும். தந்தை நம்மை இராஜாக்களுக்கெல்லாம் இராஜாவாக ஆக்குவதற்காக படிப்பிக்கிறார் என்ற நிச்சயம் முதலில் இருக்க வேண்டும். ஒவ்வொரு 5 ஆயிரம் வருடங்களுக்குப் பிறகும் உங்களை படிப்பிப்பதற்காக வருகிறேன். நாடகத்தில் எந்த மாற்றமும் ஏற்பட முடியாது.

உண்மையை உரைப்பவர் ஒரு தந்தையே ஆவார் என்பதை நீங்கள் அறிவீர்கள். மற்றபடி ஈஸ்வரனை அடைவதற்கான வழியை சொல்லக் கூடிய மனிதர்கள் அனைவரும் அவருடைய படைப்பைப் பற்றி என்னென்ன சொல்கின்றனரோ அவையனைத்தும் பொய்யே ஆகும். மனிதர்கள் புரிந்து கொள்ளவும் செய்கின்றனர், ஆனாலும் இதுவரை பிரபாவம் ஏற்படக் கூடிய நேரம் வரவில்லை, இன்னும் நேரம் எடுக்கும். இரயில் வண்டி தனது நேரத்திற்குச் சென்று சேரும் அல்லவா. 8 மணிக்குப் பதிலாக 2 மணிக்குப் போய் சேராது. நாம் இந்த முயற்சியை செய்தபடி புரிந்து கொள்கிறோம் - இப்போது சொர்க்கத்திற்கு விரைந்து சென்றிடுவோம். ஆனால் ஸ்டேஷன் மாஸ்டராகிய பாபா சொல்கிறார் - கொடி இறங்கவில்லை, அதாவது சிக்னல் கிடைக்கவில்லை, இன்னும் நேரம் இருக்கிறது. இராஜ்யம் ஸ்தாபனை ஆக வேண்டும், அப்போதுதான் செல்வோம் அல்லவா. பல குழந்தைகள் சொல்கின்றனர் - பாபா இங்கே இருந்து நாங்கள் மிகவும் கஷ்டப்பட்டு விட்டோம். பாபா சொல்கிறார் - இது உங்களுடைய முதல் தரமான பிறவியாகும். இதில் ஒரு போதும் நீங்கள் கஷ்டப்படக் கூடாது. வந்தே மாதரம் என பாடப்பட்டுள்ளது. நீங்கள் யோகபலத்தின் மூலம் முழு உலகையும் தூய்மையாக்க வேண்டும். நல்லது!

இனிமையிலும் இனிமையான காணாமல் போய் கண்டெடுக்கப்பட்ட செல்லக் குழந்தைகளுக்கு தாயும் தந்தையுமான பாப்தாதாவின் அன்பு நினைவுகளும் காலை

வணக்கமும். ஆன்மீகக் குழந்தைகளுக்கு ஆன்மீகத் தந்தையின் நமஸ்காரம்.

தாரணைக்கான முக்கிய சாரம்:

1. இந்த வினாச காலத்தில் ஒரு தந்தையின் மீது உண்மையான அன்பு வைக்க வேண்டும். நாம் இராஜயோகம் கற்றுக் கொண்டு எதிர்காலத்தில் இளவரசன், இளவரசியாக ஆகப் போகிறோம் என்ற போதை இருக்க வேண்டும்.

2. யோகபலத்தின் மூலம் முழு உலகத்தை தூய்மையாக்கக் கூடிய சேவை செய்ய வேண்டும். இந்த நம்பர் ஒன் (முதல் தரமான) பிறவியின் மீது ஒரு போதும் சலிப்படையக் கூடாது.

வரதானம் : அன்பு மற்றும் பாவனையெனும் கயிற்றின் மூலம் பகவானையே கட்டிவிடுபவராகி மகிமைக்குரியவர் ஆகுக

கோபியர்கள பகவானையே கட்டிப் போட்டார்கள் என்று பக்தி மார்க்கத்தில் கூறப் பட்டுள்ளது. இது அன்பு மற்றும் பாவனையெனும் கயிறு, அதுவே வரலாறாகப் பாடப் படுகின்றது. குழந்தைகளான நீங்கள் இப்போது எல்லையில்லா கல்ப மரத்தில் அன்பு மற்றும் பாவனையெனும் கயிறு கொண்டு தந்தையை கட்டிவிடுகிறீர்கள். இதுவே பக்தி மார்க்கத்தில் பாடப்பட்டு வருகின்றது. தந்தை அன்பு மற்றும் பாவனையெனும் கயிறுகளுக்கு கைமாறாக உள்ளமெனும் ஆசனத்தையே ஊஞ்சலாக மாற்றி குழந்தைகளுக்கு கொடுத்து விடுகின்றார். இந்த ஊஞ்ச-லேயே சதா ஆடிக் கொண்டே யிருங்கள்.

சுலோகன்: ஒவ்வொரு இன்ன-லும் தன்னை வளைந்து கொடுத்து செல்பவரே சுத்த தங்கமாவார்.